



காதி மற்றும் வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் தலைமையில் மாநில அளவிலான வனத்துறை உயர் அலுவலர்களுடனான கலந்தாய்வுக்கூட்டம், கிண்டி முதன்மை தலைமை வனப்பபாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது. உடன் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமை செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன காப்பபாளர் ராகேஷ்குமார் டோக்ரா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநர் (AIWC), உதயன், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை திட்ட இயக்குநர் ஐ.அன்வருதின், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (நிர்வாகம்) தெபாஷீஷ் ஜானா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (ஆராய்ச்சி) திருமதி. மீட்டா பானர்ஜி, ஆகியோர் உள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் 05.05.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2025–2026 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழு தலைவர் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் அரசு மருத்துவமனையில் உள்ள உள்நோயாளிகள் பிரிவு மற்றும் வெளிநோயாளிகள் பிரிவு பகுதிகளுக்குச் சென்று சிகிச்சை வழங்கப்பட்டு வருவதை பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழு உறுப்பினர் ஒ.ஜோதி மற்றும் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் தி காதர்பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

### பொதிகைத் தமிழ்ச்சங்கம் சார்பில் கவிஞர் பேரா தலைமையில் கவிதைப் போட்டி!

# பாளையங்கோட்டையில் முதல்வருக்கு பாராட்டு விழா!

## புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரில் விருதுகள் வழங்கினர்!

பாளையங்கோட்டை, மே 7-

பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பாக கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என அறிவித்த முதலமைச்சருக்கு நன்றி பாராட்டு விழா மற்றும் தமிழ் வார விழா நடந்தது.

பாளையங்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் நடந்த இந்த நிகழ்ச்சிக்கு பொதிகைத் தமிழ்ச் சங்க நிறுவுநர் கவிஞர் பேரா தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் தமிழ் வார விழாவாக “வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்” என்ற தலைப்பில் கவிதைப் போட்டி

நிகழ்ச்சியில் காரைக்குடி, மதுரை, திண்டுக்கல், நாகர்கோவில், தூத்துக்குடி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை உட்பட பல ஊர்களிலிருந்து நூறு நபர்கள் கலந்து கொண்டு கவிதை வாசித்தனர்.





பாளையங்கோட்டையில் முதல்வருக்கு பாராட்டு விழா – கவிதைப் போட்டி நடைபெற்றது. காரைக்குடியைச் சேர்ந்த சை.சபீதா பானுவுக்கு புரட்சிக்கவி பாரதிதாசன் விருதை பொதிகைத் தமிழ்ச் சங்க நிறுவுநர் கவிஞர் பேரா. வழங்கினார்.

சிறப்பாக கவிதை வாசித்த காரைக்குடியைச் சேர்ந்த சை.சபீதா பானு, மதுரை பாலகிருஷ்ணன், மேலப்பாளையம் எமி கிங்ஸ்லி மனோ ஆகியோருக்கு புரட்சிக்கவி பாரதிதாசன் பெயரில் விருதுகள் வழங்கப்பட்டன.

விருதுகளை பொதிகைத் தமிழ்ச் சங்க நிறுவுநர் கவிஞர் பேரா வழங்கி உரையாற்றினார்.

அவர் பேசுகையில்...

“கலைஞர் பெயரில் புதிய பல்கலைக் கழகம் ஒன்று தொடங்க வேண்டும் என்ற பொதககைத் தமிழ்ச் சங்கத்தின் கோரிக்கை நிறைவேற்றப் பட்டிருப்பதற்கு முதலமைச்சருக்கு நன்றியும் பாராட்டும் உரித்தாக்கிக் கொள்கிறேன். அனைவரும் ஒரு நிமிடம் எழுந்து நின்று கைகளைத் தட்டி முதல்வரைப் பாராட்டுவோம்”

...எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கூட்டத்திலிருந்த அனைவரும் எழுந்து நின்று தங்கள் கைகளைத் தட்டினர்.

கவிதைப் போட்டியின் நடுவர்களாக திண்டுக்கல் அ.ஷாஜஹான், நெல்லை டவுண் சிவ.செல்வ மாரிமுத்து, நாகர்கோவில் வன செல்வி அரவிந்தன் ஆகியோர் செயல்பட்டனர்.

நிகழ்ச்சியில் கண்ணதாசன் இலக்கியப் பேரவைத் தலைவர் முனைவர் இரா. முருகன், திருக்குறள் தகவல் மையத் தலைவர் முனைவர் வை.இராமசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

கவிதைப் போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் பாராட்டுச் சான்றுகள் வழங்கப்பட்டன.

செயற்குழு உறுப்பினர் அடையாள. லெனின் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

நிறைவாக பொதிகைத் தமிழ்ச் சங்க செயற்குழு உறுப்பினர் பா.இராம கிருஷ்ணன் நன்றி கூறினார்.

---

### ஸ்ரீராமபுரம் பேரூர்க் கழகச் செயலாளர்

# அ.ராஜா (எ) அப்துல் ரஹ்மான் மறைவு!

## அமைச்சர் ஐ. பெரியசாமி இரங்கல் செய்தி!

திண்டுக்கல், மே 7-

கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் ஐ. பெரியசாமி விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கழக முன்னோடி, தம்பிகளில் முதல் தம்பி. கொள்கை பிடிப்புள்ள செயல் வீரர். எந்த பணியைக் கொடுத்தாலும் உடனடியாக செய்யும் கழகஉடன்பிறப்பு.

மூன்று முறை பேரூராட்சிமன்றத் தலைவராக சிறப்பாக செயல்பட்ட எனது



உயிர் நண்பரும், ஸ்ரீராமபுரம் பேரூர் கழகச் செயலாளருமான அ.ராஜா (எ) அப்துல் ரஹ்மான் அவர்கள் இயற்கையோடு கலந்த செய்தி கேட்டு மனம் ஆற்ற முடியாத துயரத்தில்... அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை...

திண்டுக்கல் மாவட்டத்தில் கழகத்தின் சார்பில் நடந்த பல்வேறு போராட்டங்களில் பங்கெடுத்து, கட்சி வளர கடுமையாக உழைத்த அவரது உழைப்பையும் லட்சிய வேட்கையும் எண்ணிப் பார்க்கும் போது கண்ணீர் தானாக வழிகிறது.

அவரது மறைவு மாவட்ட கழகத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. அவரது மறைவை எண்ணி துக்கத்தில் இருக்கும் கழக முன்னோடிகளுக்கும் உடன்பிறப்புகளுக்கும் குடும்பத்தார்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.

---

# தேனி வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி. அறிவிப்பு!

தேனி, மே 7-

தேனி வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி அறிக்கை வருமாறு:-

தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்செல்வன். எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தேனி



வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் தேனி என். ஆர்.டி நகரில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று (07.05.2025 - புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் மாவட்ட கழக அவைத்தலைவர் பி.டி செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள் ,மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர் கழக, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்க தமிழ்ச்செல்வன். எம். பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்:

பொருள்: நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொது கூட்டங்கள் தொடர்பாக, கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### அரளிக்கோட்டையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தந்தை

# பி.எல்.கருத்தான் 19 ஆம் ஆண்டு நினைவு தினம்!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மரியாதை! 500 பேருக்கு நலத்திட்ட உதவி!

சிவகங்கை, மே 7-

சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தந்தை பி.எல்.கருத்தான். இவர் அரளிக்கோட்டையில் வசித்து வந்தார்.

விவசாயி. கடந்த 2006ஆம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் தேதி மரணம் அடைந்தார் .அவரது நினைவினை போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம்5ம் தேதி நலத்திட்ட உதவிகள் வழங்கி அன்னாரின் நினைவுதினம் அனுசரிக்கப்படுகிறது. இந்தாண்டு நேற்று முன் தினம் மே ஐந்தாம் தேதி கருத்தானின் 19 ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அரளிக்கோட்டையில் அவருடைய வீட்டில் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப்படத்திற்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் மாவட்ட கழகச் செயலாளர் கே ஆர்.பெரிய கருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

உடன் அவரது துணைவியார் பிரேமா பெரிய கருப்பன், தொழிலதிபர் நவநீத கிருஷ்ணன் ஆகியோர் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசிரவிக்குமார், எஸ்.மாங்குடி, மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் , மாவட்ட துணை செயலாளர் த.சேங்கை மாறன்,முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப மதியரசன் ,எஸ். மாரியப்பன் கென்னடி பொதுக் குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே. எஸ். ரவி, பி .ஆர் .பெருமாள், நகர் கழக செயலாளர்கள் சி. எம் .துரை ஆனந்த் ,பெரி.பாலா,க. பொன்னுச்சாமி மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன்,ஒன்றிய செயலாளர்கள் கே.பால சுப்பிரமணியன் , பூமணி , எஸ். சண்முக வடிவேல்,விராமதி மாணிக்கம் ,குன்னக்குடி சுப்ரமணியன் நா. நெடுஞ்செழியன், சுப. சின்னத்துரை ,பூபால சிங்கம், நாகனிரவி,துரை.ராஜாமணி , எம்.அண்ணாதுரை, கடம்பசாமி, சுப்பிரமணியன் பெ.மந்தக் காளை, எம் ஜெயராமன், அ.முத்துச்சாமி, வே. தமிழ் மாறன், கா.வெங்கட் ராமன்,

மாவட்ட இளைஞர் அணிஅமைப்பாளர் நாகனி செந்தில்குமார் துணை அமைப்பாளர்கள் கார்த்தி, பரணிக்கிட்டு எஸ்.எம் .மதிவாணன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் , மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில்,மகளீரணி நிர்வாகிகள் திலகவதி கண்ணன் ,மார்க்ரெட்கமலா, பாக்கியலட்சுமி விஜயக்குமார், தமிழ்ச்செல்வி, ராஜேஸ்வரி சேகர், மானாமதுரை நகர்மன்ற துணைத் தலைவர் பாலசுந்தர் ,பேரூர் கழக செயலாளர்கள் ஆர். கார்த்திகேயன், தி. கதிர்வேல், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சுப சண்முகநாதன் ,

மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ்.எஸ். அருணாசலம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய், துணை அமைப்பாளர் மூ. குமணன் தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து , மாவட்ட அயலக அணி அமைப்பாளர் கேப்டன் சரவணன், துணை அமைப்பாளர் சன் சீமான் சுப்பையா, நிர்வாகிகள் பிள்ளை யார் பட்டி ராஜேஷ், ஜெயகாந்தன், ராமதாஸ் ,பொருளாளர் ஏ.எம். கண்ணன் சிவபுரிசேகர்,மலைமேகு, ஏ.எல். சந்திரன், பில்லப்பன், சேவியர், அன்பு செல்வன், இளங்கோ, ஒய்.கா. சோமசுந்தரம், ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார்,உதயம் சண்முகம், வட்ட செயலாளர் ஒட்டுனர் ரமேஷ், மாமன்ற உறுப்பினர் சொ.கண்ணன், ஒட்டுனர் தாஸ், உட்பட மாவட்டம் முழுவதிலு மிருந்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் 500நபர்களுக்கு வேட்டி சேலைகள் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

---

### தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர்

# துபாய் ஹாஜி. கே.சித்திக் செய்யது மீரான் புதல்வி திருமணம்!

## பாளையங்கோட்டையில் நடைபெறுகிறது! கழகத்தினர் வாழ்த்து!

நெல்லை, மே 7

தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர் மற்றும் அமீரக தி.மு.க. செயலாளர் துபாய் ஹாஜி. கே.சித்திக் செய்யது மீரான் எஸ்.ஹலிமா ஆயிஷா ஆகியோரின் புதல்வி எஸ்.அஃப்ரா பாத்திமாவுக்கும், எம்.முகம்மது மைதீன் எம்.பீர்பாத்து ஆகியோரின் புதல்வர் எம்.அஹமது புஹாரி மைதீன் (எ) ரபீக்கிற்கும் திருமணம் 11.5.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, ஹைகிரவுண்ட் எம்.ஒ.சி. வளாகம், காயிதே மில்லத் ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது.

இத்திருமணத்திற்கு வருகை தருவோரை ஹாஜி. பி.எஸ்.பி.ஏ. கோதர் மைதீன், ஹாஜி. கே.சித்திக் செய்யது மீரான் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இத்திருமணத்தில் கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.



திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் தண்டலம் ஊராட்சி – திருவள்ளூர் இடையே 160 எண் கொண்ட புதிய பேருந்து வழித்தடத்தினை சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் கொடியசைத்து இயக்கி வைத்தார். மேலும் பொதுமக்களுடன் பேருந்தில் பயணித்தார். இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து துறை கிளை பணிமனை மேலாளர் பாஸ்கரன், பணிமனை துணை மேலாளர் வெங்கடேசன், மாவட்ட அவைத் தலைவர் க.திராவிடபக்தன், ஒன்றிய செயலாளர்கள் கே. அரிகிருஷ்ணன், எஸ். மகாலிங்கம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் பி. கே. நாகராஜ், வி. எஸ். நேதாஜி, கொப்பூர் டி. திலீப்குமார், ஆர். மோகனசுந்தரம், பி. ஆர். பிரபாகரன், கே.ஏ.மதியழகன், எல்லப்பன்,பெருமாள், சேகர், சத்தியமூர்த்தி, பகவதிராஜா, வி. பி. ரமேஷ், சுதாகர், ஜார்ஜ், தாமோதரன் , முருகன், தொமுச செயலாளர் பழனி, தொழில்நுட்ப முன்னாள் செயலாளர் நாகபுஷணம், தண்டலம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் டி.பி. ரவிச்சந்திரன், ஆர். ஏழுமலை, ஆரர். மணி, விக்கிரமாதித்தன் உள்ளிட்ட ஏராளமான கிராம பொதுமக்கள் பங்கேற்றனர்.